தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 29, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036
2005 ஏப்ரல் 11, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்."

வினை செய்வதற்குரிய வழிவகைகளெல்லாம் குறைவில்லாதபடி, அவற்றை எண்ணிப் பார்த்து, இடத்தொடு பொருந்த, குறிப்பிட்ட வினையை ஒருவர் செய்தால், அவ்வினை வெற்றிபெற, அஞ்சாமையைத் தவிர, அவருக்கு வேறு துணை எதுவும் வேண்டுவதில்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 321, 322 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 323, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

323—

கூட்டுறவு விநியோகக் கடை

***17302—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, அனக்காவூர் மதுரா, விநாயகபுரம் கிராமத்திற்குத் தனியாகக் கூட்டுறவு விநியோகக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விநாயகபுரம் கிராமத்திற்குத் தனியாகக் கூட்டுறவு நியாயவிலைக் கடை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 324, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

324—

வங்கிப் பெட்டகக் கட்டடம்

***49676—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி கூட்டுறவு விவசாய வங்கியின் அலுவலக வளாகத்தில் இடிக்கப்பட்ட வங்கிப் பெட்டகக் கட்டடம், இவ்வாண்டில் கட்டப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி கூட்டுறவு விவசாய வங்கியின் அலுவலக வளாகத்தில், இடிக்கப்பட்ட வங்கிப் பெட்டகம் கட்டும் திட்டம், இவ்வாண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 325, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.